## தேசிய கவி பாரதிக்கு ஊக்கம் அளித்த நிவேதிதை



இளைஞர்களைத் தட்டி எழுப்பிய சகோதரி நிவேதிதையின் அரும்பணிக்கு நல்லதோர் உதாரணம் தேசிய கவி பாரதிக்கு அவர் ஊக்கம் தந்தது.

1906–ஆம் ஆண்டு கல்கத்தாவில் அவரைச் சந்தித்தார் இளைஞரான பாரதி. அப்போது அடிமைத்தனத்தில் உழுன்றவர்க்கு ஆண்மையை ஊட்டும் வகையில் அவர் கூறினார் – 'பாரதத் தாய் சங்கிலிகளால் கட்டப்பட்டு உன்முன் நிற்பதாகக் காண வேண்டும். அப்போது தான் அந்தச் சங்கிலியைத் தகர்த்தெறிய வேண்டும் என்ற உணர்ச்சி உன் உள்ளத்தில் ஊற்றெடுக்கும்.'

இவ்வாறு உணர்ச்சி பொங்கக் கூறிய சகோதரி, பாரதியின் கையைப் பிடித்து வெளியே அழைத்து வந்து, அங்கிருந்த ஓர் ஆல மரத்தின் அருகே சுட்டிக் காட்டி, 'இதோ பார்பாரத மாதா!,' என்றார். என்ன ஆச்சர்யம், அவர் சுட்டிக்காட்டிய திசையில் வானளாவ நின்ற பாரதத் தாயின் விசுவரூப தரிசனம் கண்டார் பாரதி.



மெய்மறந்து நின்ற பாரதியைப் பார்த்து, 'உனது கவித் திறன் அனைத்தையும் சுதேசி சேவைக்கே வேண்டுகிறாள் பாரதத் தாய். இப்பொழுதே உன்னை நீ அவளுக்கே அர்ப்பணம் செய்து, கிடைப்பதற்கரிய அவளது அருட்பிரசாதத்தைப் பெற்றுக்கொள்' என்றார் சகோதரி.

இவ்வாறு எட்டயபுரத்து சுப்பிரமணியனை தேசிய கவி சுப்பிரமணிய பாரதியாராக ஆக்கினார் சகோதரி நிவேதிதை.

## முன்னோடியாக சகோதரி நிவேதிதை

சகோதரி நிவேதிதை சுதந்திரப் போராட்டம் என்னும் தேசிய இயக்கத்தில் பங்கு கொண்டவர் மட்டும் அல்லர். இருபதாம் நூற்றாண்டில் பாரதம் சுதந்திரம் பெறுவதற்கான தேசிய இயக்கத்தைத் துவக்கிவைத்த இந்திய தேசிய சிற்பியாக முன்னோடியாக அவர் விளங்குகிறார்.

## மகான்களின் பார்வையில் நிவேதிதை



சுவாமி விவேகானந்தருக்கு

உலகை அசைக்க வல்ல பெண்சிங்கம்



மகாகவி பாரதியாருக்கு

பெண் சமத்துவத்தைக் கற்று தந்த குரு



ஸ்ரீ அரவிந்தருக்கு

விடுதலை வேட்கையைத் தூண்டிய அக்னிக்கொழுந்து

## சகோதரி நிவேதிதையின் சிந்தனை

“அறநெறி சார்ந்ததும் தனிமனித வாழ்வைக் குறித்துமான அனைத்து விஷயங்களிலும் ஆணைவிடப் பெண்ணே அதிக முக்கியத்துவம் வாய்ந்தவளாக இருக்கிறாள்.

வாழ்வின் ஒருங்கிணைப்பு என்பது பெண்ணின் கையில்தான் இருக்கிறது. ஓர் இல்லத்தின் பண்பு எப்படி இருக்க வேண்டும் என்பதை ஒரு பெண் தீர்மானிப்பது போலவே வாழ்க்கை என்பது எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்துப் பெண் நினைப்பதே உலகில் ஆதிக்கம் செலுத்துகிறது, உலகினை உருவாக்குகிறது.”

– சகோதரி நிவேதிதை

பெண்ணே, நீ மகத்தானவள்!

# சகோதரி நிவேதிதை 150
# ரத யாத்திரை

ஜனவரி 22, 2018 – பிப்ரவரி 22, 2018



இந்திய தேசிய சிற்பி

# சகோதரி நிவேதிதை

(1867 - 1911)

27 மாவட்டங்கள் | 3000 கி.மீ

30 நாட்கள் | 2 லட்சம் மாணவிகள்

www.nivedita150.com | yatra@nivedita150.com

## ரத யாத்திரையின் நோக்கம்

- சகோதரி நிவேதிதை அவர்கள் தேசிய மற்றும் பெண்களின் வளர்ச்சிக்காக ஆற்றிய பணிகளைப் பற்றிய விழிப்புணர்வை இளைய சமுதாயத்திற்கு, குறிப்பாக பெண்களுக்கு ஏற்படுத்துவதும்;
- அவர்கள் தங்கள் வாழ்வில் சகோதரி நிவேதிதையின் பண்புகளான உத்வேகம், வலிமை, மென்மை ஆகியவற்றைக் கடைப்பிடித்து வெற்றியடைய வலியுறுத்துவதும் தான் இந்த ரத யாத்திரையின் நோக்கம்.

## இந்திய தேசிய சிற்பியாக சகோதரி நிவேதிதை



சகோதரி நிவேதிதை அவர்கள், சுதந்திரப் போராளிகளுக்கு ஒரு வழிகாட்டியாக இருந்ததோடு மட்டுமல்லாமல், பெண் கல்வியை புகுத்திடவும், இந்திய கலை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தைப் பாதுகாத்திடவும் இந்திய மக்கள் மனதில் தேசிய சிந்தனையை விதைத்திடவும் தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார்.

இளைஞர்களை தேச சேவையில் ஈடுபடத் தூண்டினார்; சுதேசி இயக்கத்திற்கு வலுச் சேர்த்தார். தேசிய உணர்வை ஊட்டும் கலை, கல்வி ஆகியவற்றின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டார்.

## சகோதரி நிவேதிதையின் வாழ்க்கைத் துளிகள்

### நிவேதிதையாக மாறிய மார்கரெட்

1895–ஆம் ஆண்டின் இறுதியில் லண்டனில் சுவாமி விவேகானந்தர் நிகழ்த்திய உரைகளைச் செவிமடுத்த மார்கரெட், சுவாமிஜியின் சிஷ்யையாகி, இந்தியாவிற்குத் தொண்டு செய்ய 1898 இன் துவக்கத்தில் இந்தியா வந்தார்.



பிரம்மச்சரிய தீட்சையின்போது குருநாதர் சுவாமி விவேகானந்தரிடமிருந்து நிவேதிதை என்ற பொருத்தமான தீட்சா நாமத்தைப் பெற்றார். பாரதத்தின் சிறப்புகளைப் புரிந்து போற்றிய நிவேதிதையின் மனதில் பாரதத் தாய் உயிரும் உணர்வும் உள்ள தெய்வமாக வடிவெடுத்து வந்தாள்.

### பெண் முன்னேற்றத்திற்கு முதன்முதலில் வித்திட்ட நிவேதிதை

1898 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கல்கத்தாவில் பெண்கள் பள்ளி ஒன்றைத் துவக்கினார் சகோதரி நிவேதிதை பள்ளியில் சேர்ந்த குழந்தைகளை அவர்களது இல்லங்களில் பின்பற்றப்பட்ட சம்பிரதாயங்களிலிருந்து மாற்றிவிடாமல், அவற்றில் பிடிப்பை வலுப்படுத்திய கல்வியை அளித்தார்.



இராமாயணம், மகாபாரதம் கற்றுக் கொடுத்தார். பாடங்களுடன் பின்னல், தையல் போன்ற கைவேலைகளையும் சொல்லிக் கொடுத்தார், தாய்மொழியின் மீதும் தாய்நாட்டின் மீதும் பக்தியை வளர்த்தார்.

## தேசிய உணர்வை ஊட்டிய நிவேதிதை

சகோதரி நிவேதிதை தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்த போது நடந்த ஒரு நிகழ்ச்சி. சேலத்தில் 05.01.1903 அன்று ஒரு பொதுக்கூட்டத்தில் சகோதரி சொற்பொழிவாற்ற ஏற்பாடாகியிருந்தது. ஆங்கிலம் கற்ற பலர் உரையைக் கேட்க வந்திருந்தனர். நாட்டைப் புனரமைப்பதில் அன்னிய அரசை எதிர்பாராமல் மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை உருக்கமான எடுத்துக் கூறினார் சகோதரி.



பேச்சின் முடிவில் 'என்னவோர் அருமையான ஆங்கிலப் பேச்சு! இத்தகைய ஆங்கில உரையை நாம் கேட்டதே இல்லை' என்று புகழ்ந்தார் நன்றி நவின்றவர். வந்ததே கோபம் நிவேதிதைக்கு.

இருக்கையிலிருந்து எழுந்த அவர், 'மூடும் உமது வாயை ! அடிமைத்தனத்தில உழன்று கிடக்கும் அசடுகள் நீங்கள் தான். ஆங்கில ஆட்சிக்குப் பொருத்தமான பொம்மைகள். தேசிய உணர்வு சிறிதுமற்ற மரக்கட்டைகள். நான் கூறிய நாட்டுக்குரிய வேலைத்திட்டம் காதில் விழவில்லை. ஆங்கிலச் சொற்சித்திரத்தில் சிக்கிவிட்டீர்கள்! வெட்கக்கேடு!' என்று கர்ஜித்தபடி வெளியேறிவிட்டார்.

இவ்வாறு உணர்வற்ற மாந்தருக்கு உணர்ச்சி ஊட்டினார் தேசிய உணர்வே வடிவெடுத்திருந்த சகோதரி நிவேதிதை.